**செய்தி வெளியீடு எண்: 925** **நாள்: 17.12.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (17.12.2018) தலைமைச் செயலகத்தில், ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள 80 மீன்பிடி படகு குழுக்களுக்கு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட 200 நேவிக் (NaVIC) எனும் ஆழ்கடல் தகவல் தொடர்பு கருவிகளை மீனவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 2018–19ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீன்பிடி படகு குழுக்களுக்கு ஆழ்கடல் தகவல் தொடர்பு சாதனைங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட நேவிக் (NaVIC) எனும் செயற்கைகோள் மூலம் குறுஞ்செய்தி பெறும் ஆழ்கடல் தகவல் தொடர்பு கருவியினை ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் 80 மீன்பிடி படகு குழுக்களுக்கு வழங்கிடும் அடையாளமாக, சென்னை, நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த ஆழ்கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள 7 மீனவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று நேவிக் கருவிகளை வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

நேவிக் கருவியானது, இந்திய மண்டல வழிகாட்டி செயற்கைகோள் அமைப்பின் (India Regional Navigational Satellite System - INRSS) உதவியுடன் வானிலை எச்சரிக்கை, வானிலை முன்னறிவிப்பு, சுனாமி, நிலநடுக்கம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகள் குறித்த குறுஞ்செய்திகளை பெற்று, புளூடூத் இணைப்பு மூலம் ஆண்ட்ராய்டு தொழில்நுட்பம் கொண்ட மீனவர்களின் கைபேசிக்கு அனுப்புகிறது. கைபேசி கருவி, இத்தகவலை மாற்றம் செய்து தகவலாக கைப்பேசி திரையில் தமிழ் உட்பட பிற பிராந்திய மொழிகளில் திரையிடுகிறது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பயனாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் 200 நேவிக் கருவிகளை தமிழ்நாடு மீனவர்களின் உடனடி பயன்பாட்டிற்காக வழங்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் பிரதிநிதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**